# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 54 — 1973 අප්‍රේල් 06 වැනි සිකුරාද — 1973.04.06

54 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II ஆ) — விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 353 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | .. | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | 359 | ஏலவிற்பனைகள் | — |
| ஏலவிற்பனையும், குத்தகை விற்பனையும் | — | நானாவித அறிவித்தல்கள் | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### காணிக் கொமிசனர் திணைக்களம்

கொழும்பு மாவட்டத்தில் கீழே காட்டிய கட்டிட வேலைக்காக 1973.04.27 பிற்பகல் 2.30 மணிவரை கொழும்பு த. பெ. 500, காணிக் கொமிசனர் திணைக்களத்தின் கேள்விப்பத்திரச் சபையின் தலைவரால் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் அன்றைக்கே பி.ப. 2.30 மணிக்கு திறந்து பார்க்கப்படும். கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்போருக்கோ அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளுக்கோ அவ்வமயம் அங்கு வந்து கலந்து கொள்ளலாம்.

| வேலையின் விபரம் | ஒப்பந்தக்காரர்களின் பதிவுத் தொகை |
|---|---|
| | ரூபா |
| கொழும்பு கிரசல் வீதியில் காணிக் கொமிசனர் திணைக்களம் பாவிப்புக்காக உத்தேசித்த வாகன வேலைத்தளம் அமைத்தல் ... ... | 50,000/- |

2. கேள்விப்பத்திரம் தேவைப்படுவோர், காணிக் கொமிசனர் அலுவலகத்தில், காணிக் கொமிசனர் பெயரில் குறிக்கப்பட்ட வேலைக்காக ரூபா 100 பணமாகக் கட்டிப் பெறும் பற்றுச்சீட்டை காணிக் கொமிசனருக்கு சமர்ப்பித்ததும் கேள்விப்பத்திரம் கொடுக்கப்படும். காசோலை, பணக் கட்டளை, தபால் கட்டளை ஆகியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அனுமதிக்கப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சேவைச் சங்கங்கள் இந்த வேலைக்காக குறிக்கப்பட்ட தொகைக்கு அல்லது கூடிய தொகைக்கு அரசாங்க பொது மராமத்து திணைக்களத்திற்கு அல்லாவிடில் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு அல்லது கல்வித் திணைக்களத்திற்கு பதிவு செய்யப்பட்டிருந்தால் இந்த வேலைக்காக கேள்விப்பத்திர முற்பணம் கட்டத்தேவையில்லை. மேற் குறிக்கப்பட்ட காசுத் தொகைக்கு பதிவு செய்யப்பட்டதாக அத்தாட்சி காட்டிய பின்பு மாத்திரம் கேள்விப் பத்திரம் கொடுக்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்களை இரண்டு பிரதிகளுடன் நிரப்பி பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அடங்கிய கடித உறை முத்திரை பொறிக்கப்பட்டு, அதன் இடதுகை மேல் பகுதியில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும். கடித மூலம் அனுப்பாத கேள்விப்பத்திரங்கள் காலிமுக செக்கிரட்டேரியட் கட்டிடத்தில் 320 ம் இலக்க அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் போடலாம்.

4. 1973.04.23 ந் திகதி முற்பகல் 10.00 மணி வரை மட்டும் கேள்விப்பத்திரம் கொடுக்கப்படும்.

5. தங்கள் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டு ஒரு வாரத்திற்குள் ஒப்பந்தப்பத்திரம் கைச்சாத்திடப்படாவிடில் அத்துடன் பிணைப்பணம் வைத்திருக்கத் தவறும் கேள்விப்பத்திரகாரரின் விண்ணப்பம் ரத்துச் செய்யப்படுவதுடன் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமும் அரசாங்கத்துக்கு சொத்தாக்கப்படும்.

6. கேள்விப்பத்திர வேலை சம்பந்தமாக மேலும் விபரங்கள் தேவைப்படின் அவற்றை காணிக் கொமிசனர் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

டி. டி. விக்கிரமதுங்க,
காணிக் கொமிசனருக்காக.

காணிக் கொமிசனர் திணைக்களம்,
செயலகம்,
தபால் பெட்டி இல. 500,
கொழும்பு 1,
1973 மார்ச் 26 ந் திகதி.

4-115—06.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 54

### முக்கிய அறிவித்தல்

ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

### இலங்கை அரச புகையிரதசேவை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சார உபகரணங்களை இலங்கை அரச புகையிரதப் பகுதிக்கு விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள், புகையிரத தலைமையக கேள்விப்பத்திரச் சபையின் தலைவரால் 1973 ம் ஆண்டு மே மாதம் 8 ம் திகதி மு.ப. 11.00 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்படும். (தபால் முகவரி : பொது முகாமையாளர் அலுவலகம், த.பெ. 355, கொழும்பு).

2. கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் வழங்குதற்கு முன்னர், தேவை ஏற்படின் கேள்விப்பத்திரம் கோருபவர்கள் தாங்கள் மேற்கண்ட சேவையை திருப்திகரமாக நிறைவேற்ற நிதி வல்லமையுடையவர்கள் என்பதை நிரூபிக்க சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

3. புகையிரத களஞ்சிய அத்தியட்சகர், த.பெ. 1347, கொழும்பு 10 என்ற விலாசத்திலிருந்து பெற்ற விண்ணப்பப்பத்திரங்களில், இரு பிரதிகளில் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

4. கேள்விப்பத்திர டிப்பொஸிற் பணமான ரூபா 250 ஐ செலுத்திய றிஸீற்றை காட்டினால் 1973, மே மாதம் 5 ம் திகதி சனிக்கிழமை மு. ப. 11.00 மணிவரை கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் வழங்கப்பெறும். இந்த டிப்பொஸிட் பணம் மருதானை இலங்கைப் புகையிரதப்பகுதி பிரதம கணக்காளர் காரியாலயத்தில் கட்டப்பட வேண்டும். கொழும்புக்கு வெளியிலாயின் கச்சேரிகளில் கட்டப்பட வேண்டும்,

5. கேள்விப்பத்திரம் கோருபவர்கள், கேள்விப்பத்திரங்களை 1973 மே மாதம் 8 ம் திகதி செவ்வாய்க்கிழமை, புகையிரத பொது முகாமையாளர் அலுவலகத்தில் திறக்கும்பொழுது சமுகமளிக்க அனுமதியளிக்கப்படுவார்கள்.

6. மேலும் விபரங்களை புகையிரத களஞ்சிய அத்தியட்சகரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எம். சரீன்,
பொது முகாமையாளருக்காக,
இலங்கை அரச புகையிரத சேவை.

கொழும்பு, 26.3.73.

4-96—06.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 54

---

### அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு குடிதண்ணீர் விநியோகத்திற்கான கேள்விப் பத்திரங்கள்—1973

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அரசாங்க அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட கிராமங்களுக்கு குடி தண்ணீர் விநியோகத்திற்கான கேள்விப்பத்திரங்கள் லொறி சொந்தக்காரரிடமிருந்து 1973 ம் ஆண்டு மே மாதம் 21 ந் திகதி பிற்பகல் 2 மணிவரை அம்பாந்தோட்டை மாவட்ட அரசாங்க அதிபரினால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் மூடும் நேரம் முடிந்ததும் திறக்கப்படும் அவ்வேளையில் கேள்வியாளர்கள் சமுகமாயிருக்கலாம்.

2. அம்பாந்தோட்டை கச்சேரியில் அல்லது எந்தக் கச்சேரியிலாவது லொறி சொந்தக்காரர்கள் வைப்புப்பணமாக ரூபா 10 (பத்து) செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்தவர்களுக்கே கேள்விப்பத்திரம் வழங்கப்படும். கேள்விப் பத்திரங்கள் 1973 ம் ஆண்டு மே மாதம் 6 ந் தேதி பிற்பகல் 2 மணிவரை கொடுக்கப்படும்.

3. கேள்விப் பத்திரங்கள் இணைப் பிரதியில் பொறியிட்ட கடிதவுறையில் உள்ளடக்கிய கடிதவுறை இடதுபக்க மேல் மூலையில் "குடிதண்ணீர் விநியோக கேள்விப் பத்திர" மென குறிப்பிட்டு கச்சேரி கேள்விப் பத்திரப் பெட்டியிலோ அல்லது பதிவுக் கடித மூலமோ அனுப்புதல் வேண்டும். சலார் ஓடும் கட்டைக்குரியதாயிருத்தல் வேண்டும். அவற்றை தெளிவாக சொல்லிலும் இலக்கத்திலும் எழுதுதல் வேண்டும்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒரு தடவைக்கு குறைந்தது 800 கலன் தண்ணீரை ஏற்றியிறக்கல் செய்யும்படி வேண்டப்படுவர். தண்ணீர் பங்கீடு முற்பகல் 6 மணிக்கும் பிற்பகல் 6 மணிக்குமிடையில் செய்தல் வேண்டும். அரசாங்க அதிபரின் வேண்டுதல்படி தண்ணீர் விநியோக பங்கீடு ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்குரிய கட்டணமாக ரூபா 500 அளிக்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் அரசாங்க அதிபரினால் வேண்டப்பட்ட பிரகாரமும் கேள்விப் பத்திரத்தின் பிரகாரமும் சேவையை கொண்டு நடத்த முடியாத பட்சத்தில் வைப்புப் பணமாகிய ரூபா 500 யையும் இழக்க வேண்டி நேரிடும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் அரசாங்க அதிபரின் வேண்டுதல்படி வேண்டிய நேரத்தில் தண்ணீர் விநியோகிப்பதற்கு வேண்டப்படுவர். நித்தியம் தண்ணீர் விநியோக சேவை தேவைப்படுமென உறுதி கூறமுடியாத்மையால் ஒழுங்கான வேலையையும் உறுதி கூறமுடியாது. தண்ணீர் விநியோகம் தேவைப்படும் தேதிகள் ஒப்பந்தக்காரருக்குத் தெரிவிக்கப்படும்.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் துப்பரவான நாகம் பூசிய தாங்கி அல்லது வவுசர் மூலமே தண்ணீர் ஏற்றியிறக்கல் செய்யும்படி வேண்டப்பட்டுள்ளனர். அரசாங்க அதிபர் இவைகளை வழங்குவதற்கு பொறுப்பெடுக்கவில்லை. வழமையாக தண்ணீர் அம்பலாந்தோட்டையிலிருந்தும், நலகமவிலிருந்தும், கதிர்காமம் பம்புதல் நிலையத்திலிருந்துமே ஏற்றியிறக்கல் செய்ய வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்வியாளரை அரசாங்க அதிபர் தண்ணீர் ஏற்றியிறக்கலை வேறு இடங்களிலிருந்தும் செய்யும்படி தேவை ஏற்பட்டால் வேண்டப்படுவர்.

7. தண்ணீர் பங்கீடு செய்யும் வீதம் ஒருவருக்கு அரைக்கலனும், ஒரு குடும்பத்திற்கு ஆகக் கூடியது 5 கலனுமாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒன்றைவிட்ட ஒரு நாளைக்கு தண்ணீர் ஏற்றியிறக்கி பங்கீடு செய்தல் வேண்டும் அல்லது நேரத்திற்கு நேரம் அம்பாந்தோட்டை அரசாங்க அதிபரின் பணிப்புப்படி செய்தல் வேண்டும்.

8. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப் பத்திரக்காரர் தண்ணீர் விநியோகிக்கும் பங்கிடும் சேவையை செவ்வனே நிறைவேற்றுவதற்குரிய உடன்படிக்கை ஒன்றை புரிந்து கொள்ள வேண்டப்படுவர். ஒப்பந்தக்காரர் கொடுக்கப்பட்ட சேவையை திருப்திகரமாக கொண்டு நடத்தத்தவறின் அல்லது எழுத்து மூலம் தனது இயலாத்தன்மையை அரசாங்க அதிபருக்கு தெரியப்படுத்தினால் அவர் தனது பாதுகாப்பு வைப்புப் பணமாகியதை முடிக்கு இழப்பதுடன் அரசாங்க அதிபருக்கு வேறு கேள்விக்காரரை தெரிவு செய்து சேவையை செயல் படுத்த அதிகாரமுண்டு.

9. அரசாங்க அதிபருக்கு ஏதாதுதல் அல்லது எல்லாக் கேள்விகளையும் அல்லது கேள்வியின் ஒரு பகுதியையேனும் எவ்வித காரணமும் காட்டாமல் நிராகரிக்க அதிகாரமுண்டு.

10. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரரை இந்த ஒப்பந்தத்திற்கு நியமிக்காத பட்சத்தில் அவருக்கு நஷ்டஈடு கோர உரிமையில்லை.

க. ஏ. குருணரத்ன,
அம்பாந்தோட்டை மாவட்ட மேலதிக
அரசாங்க அதிபர்.

கச்சேரி,
அம்பாந்தோட்டை,
1973 ம் ஆண்டு மார்ச் 20 ந் திகதி.

4-39—06.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 54.

---

### சிறு கைத்தொழில் இலாகா

நாத்தாண்டிய மின்தறி நெசவு நிலையத்தை பழுது பார்ப்பதற்கான கேள்விப்பத்திரங்கள், தலைவர், கேள்விப்பத்திர சபை, சிறுகைத்தொழில் இலாகா அவர்களால் 1973.4.26 ம் திகதி காலை 10 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

2. ஏதாவதொரு அரசாங்க இலாகாவில் கட்டிட வேலைக்கென ரூபா 25,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினைப் பதிவு செய்தவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்கள் தாக்கல் செய்ய விரும்புவோர் ரூபா 25/- ஐ வைப்புப்பணமாக இந்த இலாகாவிலாவது அல்லது கொழும்பு தவிர்ந்த வேறெந்த கச்சேரியிலாவது செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டையும் அத்துடன் பதிவேட்டையும் காண்பித்து 1973.4.25 ம் திகதி பகல் 12 மணிக்கு முன்னதாக கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

சோமபால குணதிர,
பணிப்பாளர்,
சிறு கைத்தொழில் இலாகா.

தொடர் இல. : 3/1-(1-40).
சிறுகைத்தொழில் இலாகா,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு மாச்சு மீ 27 ந் உ.

4-125—06.04.1973 ந் திகதிய வர்த்தமானி இல. 54

## இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி

உள்நாட்டில் உள்ள உலர்ந்த சுண்ணும்பு, அவிந்த சுண்ணும்பு முருகக்கல் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்களை புகையிரதப் பகுதி தலைமைக் காரியாலயத் தலைவர், விண்ணப்பச் சபை (தபால் விலாசம் : புகையிரதப் பகுதி பிரதம தலைமைக் காரியாலயம், தபால் பெட்டி 355, கொழும்பு) என்ற முகவரிக்கு 1973 ஆம் ஆண்டு மே மாதம் 4 ம் திகதி வெள்ளிக் கிழமை காலை 11.00 மணிக்கு முன்பாக அனுப்பிவைக்கும்படி கேட்கப் படுகின்றனர்.

2. விண்ணப்பம் செய்ய விரும்புவோர் விண்ணப்பம் செய்வதற்கு முன், தங்களால் இச்சேவையைச் சரிவரச் செய்யமுடியும் என்பதற்குரிய ஆதாரப் பத்திரங்களையும், பொருளாதார நிலைமையைக் குறிக்கும் பத்திரங்களையும், தேவையாயின், கொடுக்க வேண்டும்.

3. புகையிரதப் பண்டகசாலை சுப்பிரின்டன் காரியாலயம், தபால் பெட்டி 1347, கொழும்பு 10 இல் விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்று, இரண்டு பிரதிகளில் தங்கள் விண்ணப்பத்தை மனுச்செய்யவும்.

4. விண்ணப்பக் கட்டுப்பணம் ரூபா 100 கட்டிய பற்றுச்சீட்டை ஒப்படைப்போருக்கு, 1973 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிவரையும் விண்ணப்பப் பத்திரங்கள் வழங்கப்படும். இலங்கை புகையிரதப் பகுதி, மருதானை, பிரதம கணக்காளர் கந்தோரில் அல்லது கொழும்பு வெளிப்பகுதிக் கச்சேரிகளில் விண்ணப்பக் கட்டுப்பணத்தைக் கட்டலாம்.

5. 1973 ஆம் ஆண்டு மே மாதம் 4 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 11.05 மணிக்கு இலங்கைப் புகையிரத அதிபர் காரியாலயத்தில், விண்ணப்பப் பத்திரங்களை உடைக்கும்பொழுது விண்ணப்பம் செய்தோர் சமுகம் அளிக்கலாம். புகையிரதப் பண்டகசாலை சுப்பிரின்டன் காரியால யத்தில் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

எம். சறீன்,
தலைமை அதிபருக்காக,
இலங்கை அரசாங்கப் புகையிரதப்பகுதி.

கொழும்பு.
1973 ம் ஆண்டு மார்ச் மீ 28 ந உ.

4–126—06.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 54

---

## பொலிசுத் திணைக்களத்திற்கு 500 குறெஸ் சப்பாத்து மெருகுப் பொருள் (பொலிஷ்) டப்பாக்கள் வழங்குதல்

உள்ளூரிலேயே பெற்றுக்கொள்ளக்கூடிய மூலப் பொருட்களால் தயாரிக்கப்பட்ட 500 குறெஸ் சப்பாத்து மெருகுப் பொருள் (பெரிய அளவு பொலிஷ் டப்பாக்கள்) வழங்குதற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 1, பொலிசுத் தலைமையலுவலகத்தின் கேள்விப் பத்திரச் சபைத் தலைவரால் 1973 மே மாதம் 11 ம் திகதி காலை 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்களைத் திறப்பதற்காக மேலே குறிப்பிடப்பட்ட நேரத்தில் கேள்விப்பத்திர விண்ணப்பதாரர் சமூகமாயிருக்க அனுமதிக் கப்படுவர்.

3. கொழும்பு 1, பொலிசுத் தலைமையலுவலகத்தில் பொலிசுத் தலைவரிடம் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்ப படிவங் களில் கேள்விப்பத்திரங்கள் அளிக்கப்பட வேண்டும். மாதிரி (சாம்பிள்) மெருகுப் பொருள் டப்பாக்களை சாதாரண அலுவலக நேரங்களில், கொழும்பு 1, பொலிசுத் தலைமை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

4. கேள்விப்பத்திர கட்டுப்பணமாக ரூ. 200/- செலுத்தி அதற்குரிய சிட்டையைக் காட்டி 1973 மே மாதம் 10 ம் திகதி மத்தியானம் 12.00 மணிவரை கேள்விப்பத்திர விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள லாம். கட்டுப்பணத்தைப் பொலிசுத் தலைமையலுவலகத்திலாயினும் அல்லது கொழும்புக்கு வெளியே உள்ள எந்தக் கச்சேரியிலாயினும் செலுத்தலாம்.

5. மாதிரிகள் (சாம்பிள்) சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவை கேள்விப் பத்திரங்கள் திறப்பதற்கான நேரத்திற்கு முன்னரே கேள்விப்பத்திர விண்ணப்பதாரரின் பெயர், விலாசம் இடப்பட்டு பொலிசுத் தலைமை யலுவலகத்தில் கையளிக்கப்படல் வேண்டும்.

6. மேற்கொண்ட விபரங்களை பொலிசுத் தலைவரின் அலுவலகத்தி லிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஜீ. புஞ்சிமஹத்மயா,
பொலிசுத் தலைவருக்காக.

பொலிசுத் தலைமை அலுவலகம்,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு மாசசு மீ 27 ந உ.

4–139—06.04.1973 ந் திகதிய வர்த்தமானி இல. 54

---

## கேள்வி அறிவித்தல்

தண்ணீர் வழங்கல் விநியோக திட்ட மொன்றுக்கு கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய பொது முகாமையாளரினால் (நிர்வாகம்) முத்திரை இடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். இத்திட்டத்தில் 15,000 கலன் கொள்ளக்கூடிய தண்ணீர் தாங்கி, 15,000 கலன் கொள்ளக்கூடிய தண்ணீர் உறிஞ்சி, 5,000 கலன் கொள்ளக்கூடிய தண்ணீர் உறிஞ்சி, உட்பட விநியோக குழாய் இணைப்புகள், பழுது பார்த்தல் ஆகியனவும், வெலிசறையிலுள்ள கூ. மொ. வி. களஞ்சியங்களுள்ள பாதைகளுக்கு அமைக்க வேண்டும்.

120, டபிள்யூ. ஏ. டி. ராமனுயக்க மாவத்தை, கொழும்பு 2 லுள்ள அரசாங்கப் பொறியியல் கூட்டுத்தாபன ஆலோசகர் குழு முகாமை யாளர் அலுவலகத்தில் 1973, ஏப்ரல் 9 ந் திகதி திங்கட்கிழமை தொடக் கம் 1973 ஏப்ரல் 25 ம் திகதி புதன்கிழமை வரை கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். மீளளிக்கப்படும் கேள்வி வைப்பாக ரூபா நூறையும் (ரூ. 100/-) முதல் இரண்டு நகல்களுக்கு மாத்திரம் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா ஐம்பதையும் (ரூ. 50/-) ஒவ்வொரு மேலதிக கேள்விப் பத்திரங்களுக்கும் மாத்திரம் ரூபா இருபத்தைந்தை யும் (ரூ. 25/-) செலுத்தியே விலையீட்டுப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் 1973 மே மாதம் 7 ம் திகதி திங்கட் கிழமை காலை 10 மணிக்கு கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், பொது முகாமையாளர் (நிர்வாகம்) அலுவலகத்தில் முடிவடையும்.

அரசாங்க திணைக்களம் அல்லது, கூட்டுத்தாபனத்திற்கு தண்ணீர் வழங்கல், சாக்கடை வேலைகள் உட்பட வேலைகளுக்கு பதிவு செய்யப்பட்ட கட்டட ஒப்பந்தகாரர்கள் மட்டுமே கேள்விகளை அனுப்பலாம். ரூ. 300,000 க்கு அல்லது அதற்கு மேலான அத்தகைய வேலைகளுக்குப் பதிவு செய்து கொண்டவர்களாயிருக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு, முகாமையாளர், அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபன ஆலோசகர் குழு என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

பொது முகாமையாளர் (நிர்வாகம்),
கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்.

பொது முகாமையாளரின் அலுவலகம் (நிர்வாகம்),
த. பெ. இல. 990,
440, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1973 ம் ஆண்டு மாசசு மீ 24 ந உ.

4–133—06.04.1973 ந் திகதிய வர்த்தமானி இல. 54

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### உபயோகித்த தயர்களின் விற்பனை-வெரகெரை

கொழும்பு 5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், கிட்டத் தட்ட 12,000 உபயோகித்த தயர்களை (புதுப்பிக்கத்தக்கன), பொரலஸ் கமுவை, வெரகெரையிலுள்ள இ. போ. ச. விற்றுத்தீர்க்கும் நிலையத்தி லிருந்து கொள்வனவு செய்து எடுத்துச் செல்வதற்கான பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை, 1973.05.08 ஆம் தேதிவரை, ஏற்றுக் கொள்ளு வார்.

கேள்விகள், 1973.05.07 ஆம் தேதி பி. ப. 3.00 மணிவரை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் அனுப் பப்படவேண்டும். கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக மீள ளிக்கப்படமாட்டாத கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா 10/- வையும் அத்துடன் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ஒரு கூறுக்கு ரூபா 100/- தொடக்கம் ஆகக் கூடுதலான கட்டுப்பணமாக ரூபா 5,000/- வரை கட்டவேண்டும்.

வழமையான வேலை நேரங்களில் தயர்களைப் பார்வையிடலாம்.

மேலதிக விவரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள லாம்.

பிரதம விநியோக உத்தியோகத்தர்.

விநியோகப் பகுதி,
வெரகெரை, பொரலஸ்கமுவை.

4–132—06.04.1973 ந் திகதிய வர்த்தமானி இல. 54

## சுகாதாரத் திணைக்களம்

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—ஒவ்வொரு ஸ்தாபனத்திற்கும் எதிராகக் கொடுக்கப்பட்ட காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையில் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சுகாதார சேவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம் ஏற்றுக்கொள்வார்.

2. (க) **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலோ எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேல் குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்ப வேண்டும். அத்துடன் தங்களிடம் கொந்தராத்து கொண்டு நடத்துவதற்கு ஏற்ற முதலும் சேவையாளர்களும் இருப்பது என்பதையிட்டு காரியாதிகாரியிடமிருந்து கிடைக்கப்பெற்ற அத்தாட்சிப் பத்திரம் ஒன்று அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவைகளை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளவிருக்கும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கீழ்க்காணும் காரியாலயங்களில் பெற்றுக்கொள்ளலாம் : சுகாதார சேவை அத்தியட்சகர் காரியாலயங்கள், அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா, குருணகல். கேள்விகள் மூடப்படும் தினத்திற்கு முன்தினம் நண்பகல் 12 மணிக்குப் பின் கேள்விப்பத்திரங்கள் கொடுக்கப்படமாட்டா.

தகுதி விபரங்களையோ, அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினுல் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்பட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும், முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம். அல்லது என்னிடமோ அல்லது கணக்காளரிடம் கொடுத்தால் அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையில் நாலாவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை பத்து மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாமிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும், தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாட்டு "பி" அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரத்தில் அட்டவணை "சி" யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருள்களுக்கும் வீதங்களைக் குறிப்பிட வேண்டும். ஆனல் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி, அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி, எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப் பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையில் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப் பணத்தைக் கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்க வேண்டும். கேள்விப்படிவத்தில் உள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்க வேண்டும்.

13. **அரிசி.**—நோயாளிகளாலும், வேலையாட்களினுலும் ஒப்படைக்கப்பட்ட கூப்பன்களின் பொருட்டு உணவுத் திணைக்களத்திலிருந்து உதவிப் பண விகிதத்தில் அல்லது இலவசமாக அரிசி 19.12.66 ல் இருந்து பெறக்கூடியதாக அனுமதிச்சீட்டு நிலையத் தலைவரால் தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படும்.

பொ. இரத்தினசபாபதி,
சுகாதார சேவை அத்தியட்சகர்

யாழ்ப்பாணம்,
1973 ம் ஆண்டு மார்ச் மீ 23 ந் உ.

### குறித்த அட்டவணை

| 1<br>தாபனங்கள் | 2<br>கேள்விக் கட்டுப் பணம் ரூபா | 3<br>பிணை வைப்புப் பணம் ரூபா | 4<br>கேள்விக் காலம் | 5<br>உணவுகள் அண்ணளவான தொகைகள்<br>வேலைக்காரர்கள்<br>மீன் | கருவாடு | முட்டை | காய்கறி | நோயாளிகள்<br>மீன் | கருவாடு | முட்டை | காய்கறி | 6<br>கேள்விகள் மூடப்படும் திகதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அளவெட்டி .. .. | 100 | 300 | 1.5.73 லிருந்து 31.12.73 வரை | 100 | 200 | 100 | 300 | 25 | 50 | 25 | 100 | 23.4.73 |
| 2. கரவெட்டி .. .. | 100 | 300 | ஷை | 100 | 150 | 100 | 300 | 50 | 50 | 50 | 100 | ஷை |
| 3. பளை இ. அ. வை. .. .. | 100 | 600 | ஷை | 250 | 450 | 250 | 700 | 600 | 1,000 | 600 | 2,200 | ஷை |

4—95—06.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 54

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### 45/46 கலன் கொள்ளளவு தகரப் பீப்பாக்களின் விற்பனை

கொழும்பு 5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், இலங்கையிலுள்ள எல்லா இ. போ. ச. சாலைகளிலும் கிடைக்கக்கூடியதாகவிருக்கும் 45/46 கலன் கொள்ளளவு வெற்றுத் தகரப் பீப்பாக்களையும் கழிவு எண்ணெயைக் கொண்ட தகரப் பீப்பாக்களையும் கொள்வனவு செய்து எடுத்துச் செல்லுவதற்காக, 1973.05.03 ஆந் தேதி மு. ப. 10.00 மணி வரை, பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

மீளளிக்கப்படமாட்டாத கேள்விப்பத்திரக் கட்டணமாக 10/- ரூபாவையும், மீளளிக்கப்படக்கூடிய கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக 2,000/- ரூபாவையும் கட்டுவதன்பேரில், 1973.05.02 ஆந் தேதி பி. ப. 3.00 மணிவரை எனது அலுவலகத்திலிருந்து கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம வினியோக உத்தியோகத்தர்.

வினியோகப் பகுதி,
வெரகெரை, பொரலஸ்கமுவை,
1973 ம் ஆண்டு மார்ச்சு மீ 19 ந உ.

4-134—06.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 54.

---

## கடற்றொழில் திணைக்களம்

### பயனுறுத்தப்பட்ட கடலக டீசல் என்ஜின்களின் ஏல விற்பனை

கீழே நிரலில் வழங்கப்பட்ட தேதிகளிலும் இடங்களிலும் பயனுறுத்தப்பட்ட கடலக டீசல் என்ஜின்கள் பகிரங்க ஏலற்பனையில் விற்கப்படும்.

2. அட்டவணையில் குறிக்கப்பட்ட இடங்களில் என்ஜின்களைப் பார்வையிடலாம்.

3. இவ்வட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஏலவிற்பனை நடைபெறும் திகதிகளைத் தவணையிடவோ அல்லது நீக்கவோ ஏலவிற்பனையை நடாத்தும் உத்தியோகத்தருக்கு உரிமையுண்டு.

4. கொடுப்பனவுகள் பணமாகப் பின்வரும் முறைப்படி செலுத்தப்படவேண்டும் :—

(அ) விற்பனை முடிந்த உடனடியாக என்ஜின் விற்கப்பட்ட விலையில் $\frac{1}{4}$ பங்கு.

(ஆ) விற்கப்பட்ட விலையின் $\frac{3}{4}$ பங்கு மூன்று நாட்களுள் செலுத்தப்படல் வேண்டும்.

(இ) எந்த ஒரு என்ஜினைக் குறித்து விலை கேட்டல் தற்போதைக்கு ஏற்றுக் கொள்ளப்படும். ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி உரிமை அல்லது தள்ளுபடியாக்கல், விற்கப்பட்ட திகதியிலிருந்து 21 நாட்கள் வரை ஒதுக்கி வைக்கப்படும். இந்த வகையில் என்ஜினின் விற்பனை விலையின் $\frac{1}{4}$ பங்கை வைப்புப் பணமாகவும், விற்பனை முடிந்தவுடனேயே பணமாகச் செலுத்த வேண்டும். விலை கேட்டல் ஏற்கப்பட முடியுமாயின் விற்பனை விலையின் மீதி $\frac{3}{4}$ பங்கும், இறுதியாக ஏற்றுக்கொள்ளல் அறிவித்தலுக்கு 3 நாட்களுக்கு முன்னராகச் செலுத்தப்படவேண்டும். இப்படிச் செய்யத்தவறின், வைப்புப் பணம், வைப்புப்பணம் இழத்தலில் முடியும். விலை கேட்டலைத் தள்ளுபடி செய்யின் வைப்புப்பணம் மீளளிக்கப்படும்.

5. ஏலத்தில் விற்ற என்ஜின் உரிய பணம் செலுத்தி அப்புறப்படுத்தும் வரை, இவ்விடத்தில் அதன் பாதுகாப்பு விற்பனையில் வாங்கியவனையே சாரும்.

### அட்டவணை

மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் பிரிவு, கொழும்பு.

| வள்ள எண் | என்ஜினின் வகையும் இலக்கமும் | இடம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|
| — | .. ரோர்பிடோ — 10464 | இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபன வள்ளச்சாலை, மட்டக்குளி, கொழும்பு 15 | 1973.04.24 .. | காலை 9.30 |
| — | .. ரோர்பிடோ — 10400 | | | |
| — | .. ரஸ்ஷியன் — 202188 | | | |
| — | .. ரஸ்ஷியன் — 203189 | | | |
| — | .. ரஸ்ஷியன் — 202169 | | | |
| — | .. ரஸ்ஷியன் — 203190 | | | |
| — | .. ரஸ்ஷியன் — 112819 | | | |
| — | .. ரஸ்ஷியன் — 112621 | | | |
| என்எல்-25 | .. டியூட்ஸ்-எஸ்எப் 2 எல் 712 (பாகங்கள் மட்டும்) .. | கடற்றொழில் திணைக்களம், காலிமுகம், கொழும்பு 3 .. | 1973.04.26 .. | காலை 9.30 |

ஏ. ஐ. முகைதீன்,
கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு 3,
1973 ம் ஆண்டு மார்ச்சு மீ 23 ந உ.

4-86—06.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 54

---

## நில அளவைத்திணைக்களம்

### 'கிக்' குடைகள் பழுதுபார்த்தல்—1973

1973 ம் ஆண்டு மார்ச் மாதம் 2 ம் திகதியைக்கொண்ட 49 ம் இலக்க ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட கேள்விக்காய விண்ணப்பப் பத்திரங்கள் அனுப்பவேண்டிய திகதி 73.04.27 ந் திகதி காலை 10 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது. கேள்விப்பத்திரங்கள் காலை 10.15 மணிக்கு அதே திகதி திறக்கப்படும்.

எஸ். ஜே. முணசிங்கா,
பதில் நில அளவையாளர் நாயகத்துக்காக.

நில அளவைத் திணைக்களம்,
கிளை 'டி' கிருல வீதி,
கொழும்பு 5,
1973 ம் ஆண்டு மார்ச்சு மீ 22 ந் உ.

4-1—06.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 54.

**அரசாங் நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு**

*பாவித்த தயர்கள், தியூப்புகள் விற்பனைக்கான கேள்விப் பத்திரங்கள்*

கொழும்பு 7. றொறிங்டன் சதுக்கத்திலுள்ள, அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர், இவ்வமைச்சில் உள்ள பின்வரும் பாவித்த தயர்கள். தியூப்புக்கள் விற்பனைக்காக 1973, ஏப்பிரல் 27 இம் திகதி மு. ப. 10.00 மணி வரை பதிவு உறைகளில் அனுப்பி வைக்கப்படும் கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வார். கேள்விப்பத்திரங்கள் இவ்வமைச்சின் அலுவலக உதவியாளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியிலும் போடலாம்.

| தயர்களின் அளவு | | தொகை | | தியூப்புக்கள் |
|---|---|---|---|---|
| 700 14 | .. | 8 | .. | 49 |
| 650 13 | .. | 9 | .. | — |
| 640 13 | .. | 26 | .. | — |
| 750 14 | .. | 2 | .. | — |
| 695/645 14 | .. | 2 | .. | — |
| 165 15 | .. | 5 | .. | — |
| 600 16 | .. | 27 | .. | — |
| 560 15 | .. | 13 | .. | — |
| 560 14 | .. | 2 | .. | — |
| 590 14 | .. | 4 | .. | — |
| 640 15 | .. | 6 | .. | — |
| 155 12 | .. | 3 | .. | — |
| 550 12 | .. | 2 | .. | — |
| 600 12 | .. | 2 | .. | — |
| மோட்டார் சைக்கிள் தயர்கள் | .. | 4 | .. | — |

2. தயர்களையும், தியூப்புக்களையும் கிழமை நாட்களில் மு. ப. 8.30 தொடக்கம் பி. ப. 3.30 மணிவரை கொழும்பு 7, றொறிங்ரன் சதுக்கத்திலுள்ள அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் பார்வையிடலாம்.

3. கேள்வி பத்திரங்கள் இணைப்படிகளில், கேள்விப்பத்திரதாரரின் சொந்தப் படிவங்களில் தயாரிக்கப்பட்டு உறைகளில் வைத்து பொறியிடப்பட்டிருப்பதுடன் அவ்வுறைகளில் "பாவித்த தயர்கள், தியூப்புகள் வாங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்" என்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திர வைப்புப் பணமாக 50/- ரூபாவை கொழும்பு-7, றொறிங்டன் சதுக்கத்திலுள்ள அமைச்சு அலுவலகத்தில் செலுத்தி அத்தொகைக்கான பற்றுச்சீட்டைக் கேள்விப்பத்திரத்துடன் இணைத்தல் வேண்டும்.

4. அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் கேள்விப் பத்திரங்கள் ஏதாவதை அல்லது எல்லாவற்றையும் நிராகரிக்க உரித்துடையவராவர். அறிவித்தலில் உள்ள நியதிகளுக்கிணங்க அமையாத கேள்விப்பத்திரங்கள் கருத்திற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

5. கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின் அவற்றை மீளப் பெறக் கேள்விப் பத்திரதாரர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

6. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரதாரர்கள், அவர்களின் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்ற கடிதம் கிடைத்த ஏழுநாட்களுக்குள், அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுச் செயலாளரிடம் தயர்களுக்கும், தியூப்புகளுக்குமாகக் குறிப்பிடப்பட்ட தொகைக்கான பணத்தைச் செலுத்தல் வேண்டும். கொடுப்பனவு செய்த ஒரு கிழமைக்குள் தயர்களையும், தியூப்புகளையும் எடுத்துச் செல்லல் வேண்டும்.

7. மேலே 6 ஆம் வாசகத்திலுள்ள நியதிகளுக்கிணங்க ஒழுகத் தவறின், கேள்விப்பத்திர வைப்புப்பணத்தை அரசாங்கத்திற்கு இழக்க நேரிடும். அத்தகைய தவறிய ஒப்பந்தகாரர்களின் பெயர்கள், தவறிய ஒப்பந்தகாரர் நிரலில் உட்படுத்தப்படும்.

8. கொழும்பு 7, றொறிங்டன் சதுக்கத்தில் உள்ள அரசாங்க நிருவாகம். உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் 1973 ஏப்பிரல் 27 ஆம் திகதி மு. ப. 10.00 மணிக்குத் திறக்கப்படும் பொழுது கேள்விப் பத்திரதாரர்கள் சமூகமளிக்க அனுமதிக்கப் படுவர்.

9. தயர்கள், தியூப்புகள் ஆகியவற்றை அப்புறப்படுத்தல் சம்பந்தமான செலவை தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப் பத்திரதாரர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பீ. மகாதேவா,
செயலாளர்.
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி.
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.
கொழும்பு 7.
மார்ச் 26, 1973.

4-82—06.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 54.

---

**சுகாதாரத் திணைக்களம்**

*பயன்படா மோட்டார் வாகனங்களின் விற்பனைக்கான கேள்விப் பத்திரங்கள்*

கீழ்க்காணும் மோட்டார் வாகனங்களில் விற்பனைக்கான சில வைத்த கேள்விப் பத்திரங்கள் சுகாதார சேவை அதிபதியால் 1973, மே மாதம் 4 ம் திகதி மு. ப. 9.30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

| வாகனங்களின் பதிவிலக்கம் | | வாகனங்களின் இனம் | | கேட்கப்பட வேண்டிய குறைந்த விலை ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1. சீ. வீ. 3386 | .. | வீலிஸ் சுப்பர் ஜீப் | .. | 2,000 0 |
| 2. 33 ஸ்ரீ 1771 | .. | வீலிஸ் சுப்பர் ஜீப் | .. | 2,000 0 |
| 3. சீ. வீ. 2721 | .. | போர்ட்சன் லொறி | .. | 4,000 0 |
| 4. சீ. என். 1156 | .. | ஒஸ்ற்றின் நோயாளர் வண்டி | .. | 1,000 0 |
| 5. ஈ. என். 2328 | .. | வில்லிஸ் ஜீப் | .. | 3,500 0 |
| 6. 4 ஸ்ரீ 7701 | .. | ஏ. 60 கன்ட்றிமன் | .. | 9,860 0 |

கொழும்பு 5, நாரஹேன்பிட்டிய, மலேரியா தடை இயக்க அத்தியட்சகருடன் முன்னேற்பாடு செய்து, வேலை நேரங்களில் வாகனங்களைப் பார்வையிடலாம். 4 ஸ்ரீ 7701 என்ற இலக்க வாகனத்தை, கொழும்பு 10, டீ சேரம் இடத்திலுள்ள மின் வைத்தியப் பொறியியலாளர் அலுவலகத்தில் வேலை நேரங்களில் பார்வையிடலாம்.

2. கொழும்பு கச்சேரி தவிர்ந்த ஒரு கச்சேரியில் அல்லது கொழும்பு, யோர்க் வீதி இலங்கை வங்கியில் சுகாதார சேவை அதிபதியின் வரவில் கேள்வி வைப்புப் பணமாக ரூபா. 100 செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டைச் சமர்ப்பிப்பதன் பேரில் 24.4.1973 ஆம் திகதியன்று பி. ப. 2 மணிவரை கொழும்பு 10, டீன்ஸ் வீதியிலுள்ள தேசிய கயரோகத் தடை இயக்கக் கட்டடத்தில் 2 ம் மாடியிலுள்ள சுகாதார சேவை அதிபதியின் நிதிக்கிளையிலிருந்து பெறக்கூடிய படிவங்களின் இரட்டைப் பிரதிகளில் கேள்வி விலைகள் சமர்ப்பிக்கப்படவேண்டும். ஒவ்வொரு வாகனத்திற்கும் கேள்வி விலைகள் தனித்தனியாகக் கொடுக்கப்பட வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்களை வைத்தனுப்பும் காகித உறைகள் யாவற்றினதும் இடது மேல் மூலையில் "பயன்படா மோட்டார் வாகனக் கொள்வனவுக்கான கேள்விப் பத்திரங்கள்" என்று எழுத வேண்டியதுடன், அவற்றில் சுகாதார சேவை அதிபதி (நிதிக்கிளை) தபாற் பெட்டி 584, தேசிய கயரோகத் தடை இயக்கம் கட்டடம், கொழும்பு என்ற விலாசமிடப்பட வேண்டும். காகித உறையின் இடது கீழ் மூலையில் கேள்வி விலைக்காரரின் பெயரும், விலாசமும் கொடுபடவேண்டும். கேள்விப்பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பப்படலாம். அல்லது கொழும்பு கயரோகத்தடை இயக்கக் கட்டட இரண்டாம் மாடியில் பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டிக்குள் போடலாம்.

4. மேலே பந்தி 1 இல் குறிப்பிட்டுள்ள நேரத்தையும் திகதியையும் தொடர்ந்து உடனடியாகக் கேள்வி விலைகள் திறக்கப்படும். கேள்வி விலைக்காரர்கள் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் சமூகமாயிருக்கலாம். அப்பொழுது கேள்வி விலைக்காரரின் பெயர்களும், அவர்களால் குறிக்கப்பட்ட விலைகளும் வாசிக்கப்படும்.

5. ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வி விலைக்காரர், அவரின் கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டமை அவருக்குத் தெரிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 3 நாட்களுள் முழு விலையையும் செலுத்தி வாகனத்தை எடுத்துச் செல்லத் தவறினல் கேள்வி வைப்புப் பணம் எதுவித உரிமைக் கோரிக்கையுமின்றி பறிமுதலாக்கப்படும்.

6. கேள்வி விலைக்காரர் எவரேனும் அவரது கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதென்ற அறிவித்தலை எழுத்தில் பெற்ற ஏழு நாட்களுள் அவர் கேட்ட தொகையை முற்றுகச் செலுத்த மறுத்தால் அல்லது தவறினல் அவரது வைப்புப் பணம் பறிமுதலாக்கப்பட்டு, இரண்டாவது கூடிய கேள்வி விலைக்காரருக்கு வாகனம் கொடுக்கப்படுவதுடன், அவரது பெயர், அரசாங்க தவறிழைத்த கேள்வி விலைக்காரர்கள் பட்டியலில் சேர்க்கப்படும்.

*7. கேள்விப் பத்திரங்கள் 25.4.73 ஆந் திகதி பி. ப. 2 மணி வரை வழங்கப்படும்.*

*8. கொழும்பு 10, கயரோகத் தடை இயக்கக் கட்டடத்திலுள்ள சுகாதார சேவை அதிபதி நிதிக் கிளையில் பிரதான கணக்காளரது அறையில் 1973 மே மாதம் 4 ம் திகதி மு. ப. 10.00 மணிக்குக் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் சமூகமாயிருத்தற்கு கேள்வி விலைக்காரர்களோ, அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளோ விரும்பின் அனுமதிக்கப்படுவர்.*

*9. கேள்வி விலைக்காரர்கள் அவர்களது விலைகளைக் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதிலிருந்து நான்கு வார காலத்திற்குச் செல்லுபடியானவையாக வைத்திருத்தல் வேண்டும்.*

*10. கேட்கும் தொகை பத்திரத்தில் இலக்கத்தில் எழுதப்பட்டு, சொற்களிலும் திரும்பக் குறிப்பிடப்பட வேண்டும். சொற்களிலும், இலக்கங்களிலும் அல்லது அவை இரண்டிற்குமிடையில் ஏதாவது முரண்பாடுகள் இருப்பின் கேள்வி விலை நிராகரிக்கப்படும். கேள்வி விலையில் செய்யப்படும் சகல மாற்றங்களும், அழித்தல்களும் கேள்வி விலைக்காரரால் முதலெழுத்தொப்பமிடப்பட வேண்டும்.*

*11 மேலே பந்தி 5 ல் குறிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவாக கேள்வி விலை வைப்புப் பணம் திருப்பிப் கொடுக்கப்படும்.*

*12. மேலும் ஏதாவது தகவல்கள் வேண்டுமெனில், அதனைக் கொழும்பு காலி முகத்திலுள்ள அரசாங்கச் செயலகக் கட்டடம், சுகாதார சேவைத் திணைக்களம், போக்குவரத்து உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.*

*13. கேள்விப் பத்திரங்கள் எதனையும் அல்லது முழுவதையும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது நிராகரிக்கப்பதற்கான முழு உரிமையும் சுகாதார சேவை அதிபதிக்கு உண்டு.*

*என். மகேசன்,*
*சுகாதார சேவைப் பணிப்பாளருக்காக.*

*சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,*
*கொழும்பு 10,*
*1973 ம் ஆண்டு மார்ச் 28 ம் திகதி.*

4-83—06.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 54.

## பொருட்கள் விற்பனையும் பிறவும்

### சுங்க விற்பனை

வவுனியாக் கச்சேரியில் உள்ள கீழ்க்கண்ட பொருகள் 1973 ம் ஆண்டு சித்திரை மாதம் 24 ம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

பொருட்களை வாங்க விரும்புவோர் 1973 ம் ஆண்டு சித்திரை மாதம் 23 ம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் 11.30 மணி வரை பார்வையிடலாம்.

பொருட்களை ஏலத்தில் வாங்கியவர்கள் உடனடியாகப் பணத்தைச் செலுத்தி பொருட்களை எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

1954 ம் ஆண்டு மே மாதம் 28 ம் திகதி பிரசுரிக்கப்பட்ட அரசாங்க வர்த்தமானியில் உள்ள விதிகளுக்கமைய விற்பனை நடைபெறும்.

| | | |
|---|---|---|
| 1. | கண்ணுக்குப் போடும் மை | 102 டசின்கள் |
| 2. | கழுத்திற்கு அணியும் போலி அலுமினியச் சங்கிலிகள் | 19,762 |
| 3. | பட்டிகள்—வெள்ளையும் கறுப்பும் | 1,726 |
| 4. | சிப்புகள் | 4,750 |
| 5. | கைக்கடிகாரப் பட்டிகள் | 2,989 |
| 6. | ஊற்றுப் பேனைக்கள், பாக்கர், கிறெஸ்ற், நேவி, சுவான் முதலியன | 29,729 |
| 7. | பிளாஸ்ரிக் காப்புகள் | 47,616 |
| 8. | உதட்டுச் சாயம் | 384 |
| 9. | பெண்கள் தலைக்கு அணியும் லேஞ்சி மாதிரியான பட்டிகள் | 1,137 |
| 10. | பாவாடைக் கரைப்பட்டிகள் | 191 |
| 11. | மான்ரில்கள்.—(எமறல்ட்) (உத்தேச எண்ணிக்கை) | 153 குறேஸ் |

எல். பீ. விக்கிரமாராச்சி,
சுங்க கலக்டர்,
வவுனியா மாவட்டம்.

கச்சேரி,
வவுனியா,
1973 ம் ஆண்டு மார்ச் மீ 26 ந உ.

4-129—06.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 54

## அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

1.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது

# "ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி (கெசற்)"

## வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. சனிக்கிழமைகளில் மு. ப. 8·00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. சனிக்கிழமைகளில் மு. ப. 11.00 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணியோடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக மைப் அடித்தல் பிழைகளையும், கால தாமதத்தையும் தவிர்க்க உதவுவதாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயசபைத்தின் கட்டளையின் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட் புறொக்ரர்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியிட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப் பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித் தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 0 | 60 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 0 | 42 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 50 | 51 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திறும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

### தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை ரூ. ச. | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 50 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 30 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 60 | 15 |

இவைகளில் எவைவேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், துயாற் வீதி, இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

முக்கிய கவனிப்பு.—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| மார்ச் .. | 2.3.73 | வெள்ளி .. | 21.2.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 9.3.73 | வெள்ளி .. | 28.2.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 16.3.73 | வெள்ளி .. | 7.3.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 23.3.73 | வெள்ளி .. | 14.3.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 30.3.73 | வெள்ளி .. | 21.3 73 | புதன் .. | ந.ப. 12.00 |
| ஏப்பிறில் .. | 6.4.73 | வெள்ளி .. | 28.3.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 11.4.73 | புதன் .. | 4.4.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 19.4.73 | வியாழன் .. | 11.4.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 27.4.73 | வெள்ளி .. | 18.4.73 | புதன் .. | ந.ப. 12.00 |

எல். டபிள்யு. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சகத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகஸ்து மீ 18 ந் உ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.